மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதற்காகத்தான் முதலில் விடுபட்டுப் போனதை திரும்பவும் அனுப்பியிருக்கிறோம். அதற்காக அவர்கள் ஒரு ஆய்வு நடத்த வேண்டி, திரும்பவும் கேட்டு இருக்கிறோம். அந்த ஆய்வு முடிந்த பிறகுதான் அதைப் பற்றிய முழு விவரமும் இந்த அவையில் சொல்ல முடியும்.

6. அறிக்கை அளித்தல்.

பொதுக் கணக்குக் குழு.

திரு. டி. சி. விஜயேந்திரையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1989–90 ஆம் ஆண்டுக்கான பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் சார்பாக 30 முதல் 34 வரையிலுள்ள அறிக்கைகளை இந்தப் பேரவைக்கு அளிக்கிறேன்.

7. விதி 110-ன் கீழ் முதலமைச்சரின் அறிக்கைகள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விதி 110-ன் கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அவையில் 2 அறிவிப்புகளைச் செய்கிறார்கள்.

(அ) நாகப்பட்டினத்திலிருந்து படகுகளில் மீன் பிடிக்கச் சென்ற சிலர் பாதுகாப்புடன் திரும்பியுள்ளது குறித்து.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2 நாட்களுக்கு முன்பு மார்க்சிஸ்டு கம்யூனிஸ்ட் கட்சியினுடைய நாகைத் தொகுதியினுடைய சட்ட மன்ற உறுப்பினர் நண்பர் திரு. வீரையன் அவர்கள் 65 படகுகளில் மீன் பிடிக்கச் சென்ற 300-க்கும் மேற்பட்ட மீனவர்கள் காணப்படவில்லை என்றும், அவர்களை உடனடியாக காப்பாற்றுகின்ற பொறுப்பில் அரசு ஈடுபட வேண்டும் என்றும் வலியுறுத்திக் கூறினார்கள். அவர்கள் அந்தச் செய்தியைச் சொன்ன அடுத்த கணமே தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவரோடும், அங்குள்ள காவல் துறை அதிகாரிகளோடும் தொடர்பு கொண்டு அங்கிருந்து கிடைத்த தகவலின் அடிப்படையில் உடனடியாக நம்முடைய தமிழக அரசின் தலைமைச் செயலாளர், இலங்கையில் உள்ள கொழும்பு நகரத்திலுள்ள இந்திய தூதுவராலயத்தோடு தொடர்பு கொண்டு அதன் தொடர்ச்சியாக நானும் கொழும்போடு பல வகையிலும் தொடர்புகொண்டு அவசரமாக எடுத்த நடவடிக்கைகளின் காரணமாக அந்த 65 படகுகளும் நேற்றைய தினம் தமிழகத்திற்குப் பத்திரமாக திரும்பி வந்து விட்டன. அதிலிருந்த 300 மீனவர்களும் நல்ல பாதுகாப்போடு இங்கே வந்து இருக்கிறார்கள். அவர்களை நம்முடைய தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட காவல் துறை அதிகாரிகள் சென்று வரவேற்று அவர்களுடைய குடும்பத்தாரிடத்தில் ஒப்படைத்து மகிழ்ச்சியை தெரிவித்துக் கொண்டு இருக்கிறார்கள்.

அவர்கள் எப்படி அங்கு கொண்டு போகப்பட்டார்கள் என்பதைக் குறித்தும், வந்தவர்கள் என்ன செய்தியினைச் சொன்னார்கள் என்பதைக் குறித்தும் சில தகவல்கள் வந்துள்ளன. அதையும் இந்த அவைக்கு தெரிவிப்பது கடமை என்று கருதுகிறேன். நான் அன்றைக்குச் சொன்னதைப் போல, எப்படி ஆந்திர கடற்கரை ஓரத்தில் தமிழக மீனவர்கள் தங்கள் எல்லையைக் கடந்து மீன் பிடிக்கச் செல்லும்போது ஆந்திர மீனவர்களால் அவர்கள் பிடிக்கப்படுவதும், தமிழக அரசின் முறையீட்டின் மீது அவர்கள் பின்னர் விடுவிக்கப்படுவதும் கடந்த காலத்தில் சில பல நிகழ்வுகளாக இருந்தனவோ அதே போல் ஒரு நிகழ்வாகத்தான் நம்முடைய மீனவர்கள் சற்று எல்லையைக் கடந்து சென்ற போது அங்கேயுள்ள மீனவர்களால் சுட்டிக் காட்டப்பட்டு இப்போது வட கிழக்கு மாநிலப் பகுதியிலே குறிப்பாக யாழ்ப்பாணம் பகுதியிலே இன்றைக்கு ஆதிக்கத்திற்குப் பெரும் பகுதி வந்து விட்ட விடுதலைப் புலிகள் அவர்களை அழைத்துச் சென்று இருக்கிறார்கள். மீண்டவர்கள் சொன்ன தகவல்கள், எங்களை ''இன்புறுத்தி'' என்ற ஒரு கிராமத்தில் கொண்டு போய் வைத்து இருந்தார்கள். ஊரின் பெயர் இன்புறுத்தி, உங்களை ஒன்றும் செய்ய மாட்டோம், நீங்கள் உங்கள் எல்லையைத் தாண்டியதால் தான் அழைத்து வந்தோம் என்று கூறினார்கள். இரவு தங்க வைத்து நல்ல சாப்பாடு எல்லாம் கொடுத்து, வீடியோ படம் எல்லாம் போட்டுக் காட்டியிருக்கிறார்கள். மேலும் அவர்களிடம் கூறும்போது எங்கள் குறைகளைச் சொல்ல இப்போது வட கிழக்கு மாகாணத்தில் எங்களுக்கு அரசு இல்லை. நாங்கள் விடுதலைப் புலிகள் மூலமாகத்தான் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. நீங்களும் தமிழர்கள் தான், நாங்களும் தமிழர்கள் தான், இந்தக் கடல் தான் நம்மைப் பிரிக்கிறது. இனிமேல் நீங்கள் இங்கே வராதீர்கள். உங்கள் எல்லைக்குள்ளேயே நீங்கள் மீன் பிடித்துக் கொள்ளுங்கள்; நாங்களும் எங்கள் எல்லைக்குள்ளேயே மீன் பிடித்துக் கொள்ளுகிறோம். எங்களுக்கு ஏராளமான பிரச்சினைகள் இருக்கின்றன.

10-25 மணி.

அதனால் எங்கள் எல்லையிலே வந்து மீன் பிடிக்க வேண்டாம் தயவு செய்து அப்படி செய்யாதீர்கள் என்று கூறி இருக்கின்றார்கள். இந்தச் செய்தியைச் சொல்லி, மகிழ்வோடு திரும்பியுள்ள 300-க்கு மேற்பட்ட மீனவப் பெருமக்களை எல்லாம் இந்த அவையிலேயுள்ள மாமன்ற உறுப்பினர்கள் சார்பாக நான் மகிழ்ச்சியோடு வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் என்ன ஆனார்களோ என்று கலங்கித் தவித்துக் கொண்டிருந்த நாகை வட்டாரத்தைச் சேர்ந்த மீனவக் குடும்பங்களுக்கும் ஒரு ஆறுதல் ஏற்பட்டு இருக்கிறது. இந்தச் செய்தியை உடனடியாக இந்த அவைக்குத் தெரிவித்து நல்ல ஏற்பாடுகளைச் செய்யத் தூண்டுகோலாக இருந்த, அந்தத்

தொகுதியிலே, எப்போதுமே சுறுசுறுப்பாக இயங்கக் கூடிய நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் வீரையன் அவர்களுடைய முயற்சியையும் நான் பாராட்டாமல் இருக்க முடியாது. அவருக்கும் இந்த அவையின் சார்பிலே பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) விடுதலைப் புலிகள் நிலை பற்றி இந்தியாவில் ''நகைமுகன்'' என்பவர் பேசியதாகப் பத்திரிகையில் வந்துள்ள செய்தி குறித்து.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அடுத்து, இன்னொரு அறிவிப்பாக ஒரு செய்தி இன்றைக்கு பத்திரிகைகளிலே பரபரப்பாக வந்திருக்கின்றது. நகைமுகன் என்கின்ற ஒருவர் சொன்னதாக, அவர் டெல்லியிலே சென்று பேசியதாக அந்தச் செய்தி வந்து இருக்கிறது. அது குறித்து, பெரும் பதட்ட நிலை ஏற்படாவிட்டாலும் கூட, இன்றைய மிக முக்கியமான பத்திரிகை ''தினமணி'' பத்திரிகையில் ஒரு தலையங்கமே எழுதப்பட்டிருக்கிற காரணத்தால் நான் அதற்கு விளக்கம் அளிக்க வேண்டியவனாக இருக்கிறேன். அந்த நகைமுகன் பேசியதாக வந்துள்ள செய்தி : தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன சார்பில், நகைமுகன் என்பவர் ஒரு கூட்டத்திலே பேசினாராம் ; இந்திய ஏகாதிபத்தியத்தின் பிடியிலிருந்து சீக்கியர்கள் விடுதலை பெற விடுதலைப் புலிகளின் ஆதரவு உண்டு என்று அவர் குறிப்பிட்டாராம் ; சீக்கியர்களும், தமிழர்களும் மறவர் குலத்தவர் என்றும், இந்துக்களுடைய பாசிசத்தை எதிர்ப்பவர்கள் என்றும் அவர் பேசியதாகத் தெரிய வருகிறது, என்று வந்திருக்கிறது. அவர் பிரபாகரனுக்கு வேண்டியவரா இல்லையா என்பதெல்லாம் அல்ல பிரச்சினை. இந்திய நாட்டிற்குள்ளே இருக்கின்ற ஒற்றுமையை ஊனப்படுத்துபவராகவோ அமைதியைக் குலைப்பவராகவோ, பிரிவினையைத் தூண்டுபவராகவோ யாராக இருந்தாலும் அவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்படுவார்கள். அவர் நகைமுகனாக இருந்தாலும் சரி, கஜமுகனாக இருந்தாலும் சரி, எந்த முகனாக இருந்தாலும் அவர்கள் தண்டிக்கப்படுவார்கள். உடனடியாக இது குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தமிழகக் காவல் துறைக்கு கட்டளை இடப்பட்டிருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

8. சட்டமுன்வடிவு (ஆய்வு செய்தல்)

நிதி ஒதுக்க (எண் 2) சட்டமுன்வடிவு, 1990.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :